


**29.04.2025**

**தலைப்பு செய்திகள்**

- **குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு,** பத்ம விருதுகளை இன்றுமாலை வழங்குகிறார்.
- **நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து** பிரதமர் திரு. நரேந்திரமோடியுடன், பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.
- **பிரான்ஸ் நாட்டிடமிருந்து 26** ரஃபேல் போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான பாதுகாப்பு ஒப்பந்தம் இன்று கையெழுத்தாகிறது.
- **தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு** இரண்டு சதவிகித அகவிலைப்படி உயர்வை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- **மேட்ரிட் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர்** முதல்சுற்றில் யூகி பாம்ப்ரி, ராபர்ட் இணை இன்று களமிறங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖❖

**பத்ம விருதுகள்**

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பத்ம விருதுகளை இன்றுமாலை குடியரசு தலைவர் மாளிகையில் வழங்கவுள்ளார்.

கலை, சமூகப்பணி, பொதுப்பணி, அறிவியல், பொறியியல், வர்த்தகம், தொழில், மருத்துவம், இலக்கியம், கல்வி, விளையாட்டு, குடிமைப்பணிகள் உள்ளிட்ட

பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக சேவையாற்றியவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

அரசு அறிவித்த 139 பத்ம விருதுகளில், 7 பத்ம விபூஷண், 19 பத்ம பூஷண், 113 பத்ம ஸ்ரீ விருதுகள் வழங்கப்படவுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

**பஹல்காம் தீவிரவாத தாக்குதல்களை தொடர்ந்து** மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங், பிரதமர் திரு. நரேந்திரமோடியிடம் இன்று எடுத்துரைத்தார்.

புதுதில்லியில் 40 நிமிடங்கள் நடைபெற்ற இந்த சந்திப்பில், பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், முப்படைகளின் தயார்நிலை ஆகியவற்றை பிரதமரிடம் அமைச்சர் எடுத்துரைத்ததாக தெரிகிறது.

முன்னதாக நேற்று ராணுவ தலைவர் திரு. அனில் சவுஹான், திரு.ராஜ்நாத் சிங்கை அவரது இல்லத்தில் சந்தித்து நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளை எடுத்துரைத்தது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖

ர∴பேல்

**பிரான்ஸ் நாட்டிடமிருந்து** 26 ர∴பேல் கடல்சார் போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான பாதுகாப்பு ஒப்பந்தம் இன்று பிற்பகல் கையெழுத்தாகிறது.

பாதுகாப்பு அமைச்சகத்தின் உயரதிகாரிகள் மற்றும் பிரான்ஸ் நாட்டு தூதர் முன்னிலையில் புதுதில்லியில் இந்த உடன்படிக்கை எட்டப்படுகிறது.

நவீன ஆயுதங்களையும், ஏவுகணைகளையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள இந்த ர∴பேல் போர் விமானங்கள், இந்திய கடற்படையின் தேவைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஐ.என்.எஸ். விக்ரமாதித்யா, ஐ.என்.எஸ். விக்ராந்த், விமானம் தாங்கி கப்பல்களில் இவை பொருத்தப்படும்.

❖❖❖❖❖❖❖❖❖

## பாகிஸ்தான் 16 **Youtube**

பாகிஸ்தான் நாட்டின் 16 **Youtube** சேனல் இணையதள சேவைகளை இந்தியா தடைசெய்துள்ளது

பஹல்காம் தீவிரவாத தாக்குதல்களை தொடர்ந்து இந்தியாவிற்கு எதிராக இந்த **Youtube** சேனலில் தவறான போலி செய்திகள் வெளியானதை தொடர்ந்து இந்நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டுள்ளது.

உள்துறை அமைச்சகத்தின் சார்பில் 2 சமூக வலைதளப் பதிவுகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பஹல்காம் தாக்குதல் தொடர்பாக வெளியான **BBC** செய்திக்கு இந்தியா தனது ஆட்சேபத்தை தெரிவித்துள்ளதோடு, **BBC** தலைமையிடம் இதுதொடர்பான இந்திய மக்களின் உணர்வுகளையும் எடுத்துரைத்துள்ளது.

**BBC** செய்திகளை வெளியுறவு அமைச்சகம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

## அஷ்விணி வைஷ்ணவ்

**செயற்கை நுண்ணறிவு இயக்கத்தின் கீழ் நாட்டின்** இறையாண்மைக்கான மொழி மாதிரியை உருவாக்கும் சர்வம் செயற்கை நுண்ணறிவை மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.

உள்நாட்டு செயற்கை நுண்ணறிவு திறனை வலுப்படுத்தும் நோக்கத்தில் இந்நடவடிக்கை

இந்திய மொழிகளின் திறனாய்வு, மொழிப்புலமை போன்றவற்றை மேம்படுத்தும் வகையில் இது கட்டமைக்கப்படும்.

தற்சார்பு பாரத இயக்கத்துடன் இணைந்து இந்த செயற்கை நுண்ணறிவு இதற்கான கட்டமைப்பை உருவாக்கவுள்ளது.

நாட்டின் இறையாண்மையை பராமரிக்கும் வகையில் உருவாக்கப்படும் இந்த செயற்கை நுண்ணறிவு மொழி மாதிரிகள் சர்வதேச அளவில் போட்டியிடும் திறன் வாய்ந்ததாக இருக்கும் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

தனிநபர் தரவுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு தேசிய பாதுகாப்பை முன்னெடுத்துச் சென்று, சுகாதாரம், கல்வி, வேளாண்மை, ஆட்சிமுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்த செயற்கை நுண்ணறிவு செயலாற்ற வகை செய்யப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

**ராஜீவ்ரஞ்சன் சிங்**

**மத்திய மீன்வள அமைச்சகத்தின் கீழ் கடலோர** மாநில அமைச்சர்கள் பங்கேற்கும் சிறப்பு கூட்டம் மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங் தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது

பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 7 கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், 255 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு முக்கிய திட்டங்கள் இந்நிகழ்வில் தொடங்கி வைக்கப்படுகின்றன.

மத்திய அமைச்சர்கள் திரு. எஸ்.பி.சிங் பாகேல், திரு. ஜார்ஜ் குரியன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

**அப்துல் கலாம்**

நாட்டின் தேசிய அருங்காட்சியகம், முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் தனிப்பட்ட கட்டுரை தொகுப்புகளை கையகப்படுத்தி உள்ளது.

தேசிய அருங்காட்சியக தலைமை இயக்குநர் திரு. **அருண்சிங்கால்** மற்றும் டாக்டர் கலாமின் குடும்பத்தார் முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

முன்னாள் குடியரசு தலைவர்கள் தொடர்பான ஆவணங்களை சேகரித்து, அதனை தொகுக்கும் பணிகளை அருங்காட்சியகம் மேற்கொண்டு வருவதாக திரு. அருண்சிங்கால் தெரிவித்துள்ளார்.

முன்னாள் குடியரசு தலைவர்களான டாக்டர் ராஜேந்திர பிரசாத், வி.வி. கிரி ஆகியோர் தொடர்பான ஆவணங்களை அருங்காட்சியகம் ஏற்கனவே தன்வசம் வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பொது ஆவண சட்டம் 1993-ன் படி இந்நடவடிக்கையை அருங்காட்சியகம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய நாட்டின் பல்வேறு தரப்பை சேர்ந்த முக்கிய தலைவர்களின் ஆவணங்களின் தொகுப்புகளை அருங்காட்சியகம் வைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர் - அகவிலைப்படி**

**தமிழகஅரசு பணியாளர்களுக்கு** 2 சதவிகித அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் அவை விதி 110-ன் கீழ் இன்று அறிக்கை தாக்கல் செய்து பேசிய முதலமைச்சர், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு திருமண முன்பணம் 5 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் கூறினார்.

அரசு ஊழியர்களின் குழந்தைகள் தொழிற்கல்வி பயில ஒருலட்சம் ரூபாயும்,

கலை அறிவியலுக்கு 50 ஆயிரம் ரூபாயும் முன்பணம் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

அரசு ஊழியர்களுக்கு பண்டிகைகால முன்பணம் 20 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்படும் என்றும்,

ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகைகால முன்பணம் 6 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சி மற்றும் டி பிரிவு ஓய்வூதியதாரர்களுக்கான பொங்கல் பண்டிகை பரிசுத்தொகை ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்,

ஈட்டிய விடுப்பு சரண் இந்த ஆண்டே நடைமுறைப் படுத்தப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டார்.

.. **வாய்ஸ்** ..

பழைய ஓய்வூதிய திட்டம் ஆராய அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் வரும் செப்டம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

**காவல்துறை மானிய கோரிக்கை**

**காவலர் துறை மானிய கோரிக்கையில்** காவலர்களின் சேமநல நிதி 8 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

பணியின் போது உயிரிழக்கும் காவலர்களுக்கான கருணை நிதி 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்,

10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் 10 இடங்களுக்குள் வரும் காவலர்களின் குழந்தைகளின் கல்வி பரிசுத்தொகை அதிகரிக்கப்படும் என்றார்.

பொதுமக்களிடமிருந்து டெபாசிட் தொகை வசூலித்து ஏமாற்றிய நிறுவனங்களிடமிருந்து 97 கோடிரூபாய் மீட்கப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

**கலைஞர் பல்கலைக்கழகம்**

**கும்பகோணத்தில் கலைஞர் பல்கலைக்கழகம்** அமைப்பதற்கான செயல்வடிவ மசோதாவை உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி.செழியன் இன்று சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார்.

அரியலூர், நாகப்பட்டிணம், தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய 4 மாவட்டங்களை சேர்ந்த மாணவர்களின் மேம்பாட்டிற்காக உலகத்தரம் வாய்ந்த வசதிகளையும், அறிவு பரப்புதலையும் நோக்கமாக கொண்டு இப்பல்கலைக் கழகத்தை உருவாக்க இம்மசோதா வகை செய்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

**அமைச்சரவை மாற்றம்**

**தமிழக அமைச்சரவை இன்று மாற்றம்** செய்யப்படுகிறது. அமைச்சர் பதவியிலிருந்து திரு. செந்தில்பாலாஜி, திரு. பொன்முடி ஆகியோர் ராஜினாமா செய்ததை தொடர்ந்து, போக்குவரத்து துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கருக்கு கூடுதல் பொறுப்பாக மின்சாரத்துறையும்,

வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. முத்துசாமிக்கு, கூடுதலாக மதுவிலக்கு, ஆயத்தீர்வை துறையும்,

பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜகண்ணப்பனுக்கு கூடுதலாக வனத்துறையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. மனோதங்கராஜ் அமைச்சரவையில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

புதிய அமைச்சரவை பதவியேற்பு நிகழ்ச்சி ஆளுநர் மாளிகையில் இன்றுமாலை நடைபெறவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**தண்டி யாத்திரை**

**திருச்சியிலிருந்து வேதாரண்யம் வரையிலான** 95-வது ஆண்டு நினைவு உப்பு சத்தியாகிரக தண்டி யாத்திரை திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இன்றுகாலை புறப்பட்டது.

இக்குழுவின் தலைவர் திரு. தே.சக்தி செல்வ கணபதி, பொதுச்செயலாளர் திரு.கே.சுப்ரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ள இந்த யாத்திரை ஸ்ரீரங்கம், திருவையாறு, மன்னார்குடி, திருத்துறைபூண்டி வழியாக நாளைமறுநாள் வேதாரண்யம் சென்றடையும்.

அதனைத் தொடர்ந்து அகஸ்தியம்பள்ளியில் தியாகிகள், பொதுமக்கள், மாணாக்கர் பங்கேற்கும் உப்பு அள்ளும் நிகழ்வும் இடம்பெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

**பாவேந்தர் பாரதிதாசன்**

**பாவேந்தர் பாரதிதாசனின்** 135-வது **பிறந்தநாள்** நாளை கொண்டாடப்படுவதையொட்டி, நாளைமுதல் வரும் 5-ம் தேதிவரை தமிழ்நாட்டில், தமிழ் வார விழா கொண்டாடப்படுகிறது.

சென்னை காமராஜர் சாலையிலுள்ள பாவேந்தரின் திருவுருவச்சிலைக்கு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், நாளை, மாலைஅணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

**மீன்பிடி திருவிழா வாய்ஸ்**

மதுரை மாவட்டம் அரியூர்பட்டி கிராமத்தில் சாத்தன் கண்மாயில் மீன்பிடி திருவிழா பாரம்பரிய முறைப்படி இன்று விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖❖

**கோவில்**

**கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் அருள்மிகு** தாணுமாலய சுவாமி திருக்கோவில் சித்திரை பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

இவ்விழாவின் முக்கிய நிகழ்வான தெற்போற்சவம் வரும் வரும் 6-ம் தேதி நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**ஈரோட்டில் கோடை வெயிலின் தாக்கம்** 100 டிகிரியையும் தாண்டிய நிலையில் வெப்பத்தின் தாக்கத்தை குறைக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள போக்குவரத்து நிறுத்தத்தில் பசுமை பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

**ஹஜ் யாத்திரை செல்லவுள்ள திருப்பத்தூர்** மாவட்டத்தை சேர்ந்த 436 பேருக்கு சிறப்பு தடுப்பூசி முகாம், சுகாதார பணிகள் துணை இயக்குநர் அலுவகத்தில் நடைபெற்று வருகிறது.

இதனைத் துவக்கி வைத்து பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் சிவ சவுந்தரவள்ளி இன்று தொடங்கி 3 நாட்களுக்கு நடைபெறும் இம்முகாமை இஸ்லாமியர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**ஸ்பெயினில் நடைபெறும் மேட்ரிட் ஓப்பன்** டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி, அமெரிக்காவின் ராபர்ட் இணை – பின்லாந்து, பிரிட்டன் இணையுடன் மோதுகிறது.

மற்றொரு போட்டியினல் ரோஹன் போப்பண்ணா, பென் ஷெல்டன் இணை – அமெரிக்க இணையை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில்** ஜெய்ப்பூரில் இன்றிரவு ஏழரை மணிக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் - குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**